அசல் வழக்கு எண். 91/2018 தேதி. 07.11.2023

வா.சா1 - தேவதர்சினி

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் அம்மா வழக்கு தாக்கல் செய்த போது வழக்கின் விரவம் எனக்கு தெரியாது. என் அம்மா இறந்த பின் தாவா வழக்கு விவரம் எனக்கு தெரியும். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்து உள்ள கிராமத்தில் நாங்கள் வசிக்கவில்லை. தாவா வழக்கு மேல்புறம் உள்ள எங்கள் அரை அடி இடத்தை ஆக்கிரமித்துள்ளதால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சுவாதீனம் மீட்பு பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. 19.03.1998 ம் தேதி சையது முகமது என்பவர் இரசூல் பிபி என்பவரிடம் தாவா சொத்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி விவரத்தை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. தாவா சொத்திற்கு சையது முகமது பெயரில் பட்டா இருந்தது.

2. பட்டா நகல் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து சையது முகமது கிரையம் பெற்ற போது காலி இடமாக இருந்தது. சையது முகமதுவிடம் ஆரோக்கிய ஜெயராஜ் தாவா சொத்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அதன் விவரத்தை நான் தெரிந்துகொள்ளவில்லை. ஆரோக்கிய ஜெயராஜ் ஹோமியோபதி மருத்துவராக உள்ளார். ஆரோக்கிய ஜெயராஜ் தாவா சொத்தில் பசுமை வீடு திட்டத்தில் வீடு கட்டினார். பசுமை வீடு திட்டத்தில் எந்த வருடம் வீடு கட்டினார் என்று எனக்கு தெரியாது. தாவா வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் விவரம் எனக்கு தெரியாது.

(பிராதிவதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.Bala Murugan

**Principal District Munsif,**

**Kulithalai.**